

திருச்சியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு எடமலைப்பட்டி புதூர் மாநகராட்சி பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் நடைபெற்ற பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாமை தொடங்கி வைத்து பார்வையிட்டார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரதீப் குமார் மாநகராட்சி மேயர் அன்பழகன், மாநகராட்சி ஆணையர் வைத்தியநாதன், சட்டமன்ற உறுப்பினர் சௌந்தரபாண்டியன், ஸ்டாலின் குமார், மருத்துவக் கல்லூரி முதல்வர் நேரு, பொறியாளர் சிவபாதம், சித்த மருத்துவர் காமராஜ், கவுன்சிலர் முத்துச்செல்வம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## மறவமங்கலத்தில் பொதுக்கூட்டம்!

*சிவகங்கை, ஜூன் 25-*

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் தெற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் மறவமங்கலத்தில் ஒன்றிய கழக செயலாளர் யோக கிருஷ்ணகுமார் ஏற்பாட்டின் பேரில் மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவு அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் தலைமையில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் முன்னிலையில் கலைஞர் நூற்றாண்டு பிறந்தநாளை முன்னிட்டு பொதுக்கூட்டம் நடைபெற்றது. தெற்கு ஒன்றிய செயலாளர் யோக. கிருஷ்ணகுமார் வரவேற்புரை ஆற்றினார். திண்டுக்கல். ஐ.லியோனி குழுவினரின் கலைஞரின் புகழுக்கு பெரிதும் துணைநின்றது அரசியல் பணியே - இலக்கியப் பணியே என்ற தலைப்பில் இன்னிசை பட்டிமன்றம் நடைபெற்றது.

## மணிப்பூரில் அமைதியை நிலைநாட்டத் தவறியது

# ஒன்றிய பா.ஜ.க. அரசின் நிர்வாகத் திறமையின்மையை காட்டுகிறது!

### அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் பங்கேற்றபின் மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா பேட்டி!

*புதுடெல்லி, ஜூன் 26-*

மணிப்பூரில் அமைதியை நிலைநாட்ட எடுத்த நடவடிக்கை பலனளிக்காதது ஒன்றிய பா.ஜ.க. அரசின் நிர்வாகத்திறமையின்மையை காட்டுவதாக மாநிலங்களவை தி.மு.க. குழுத் தலைவர் திருச்சி சிவா தெரிவித்துள்ளார்.

மணிப்பூரில் கடந்த ஆண்டு சட்டப்பேரவை தேர்தலில் பாஜக தனிப்பெரும்பான்மையுடன் வெற்றிபெற்று ஆட்சியமைத்தது. பா.ஜ.க.வைச் சேர்ந்த பிரேன் சிங் முதல்வராக இருந்து வருகிறார். மணிப்பூரில் 53 சதவீதம் இருக்கும் மைத்தி சமூகத்தினர், தங்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். இதற்கு, பழங்குடியினர் பட்டியலில் இடம் பெற்றுள்ள குகி சமூக மக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.



இதுதொடர்பாக இருதரப்பினர் இடையே கடந்த மே மாதம் 3ம் தேதி மோதல் ஏற்பட்டது. 50 நாட்களுக்கும் மேலாக நீடித்து வரும் இந்த போராட்டத்தில் இதுவரை நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், மணிப்பூர் நிலவரம் குறித்து விவாதிக்க ஒன்றிய அரசு அழைப்பு விடுத்த அனைத்துக் கட்சி கூட்டம் உள்துறை அமைச்சர் அமித்ஷா தலைமையில் டெல்லியில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கலந்த கொண்டபின் செய்தியாளர்களிடம் பேசிய மாநிலங்களவை தி.மு.க. குழு தலைவர் திருச்சி சிவா, மணிப்பூருக்கு உடனடியாக அனைத்துக்கட்சிக்குழுவை அனுப்ப வேண்டும் என்று தி.மு.க. சார்பில் வலியுறுத்தியதாக தெரிவித்தார்.

மணிப்பூரில் அமைதியை நிலைநாட்டுவது குறித்து பிரதமர் மோடி இதுவரை கருத்து தெரிவிக்காதது கவலை அளிப்பதாகவும், அமைதியை நிலைநாட்ட ஒன்றிய, மாநில பா.ஜ.க. அரசுகள் எடுத்த நடவடிக்கை பலனளிக்காதது பா.ஜ.க. அரசின் நிர்வாகத்திறமையின்மையை காட்டுவதாகவும் விமர்சித்தார். மேலும், மணிப்பூருக்கு அனைத்துக்கட்சிக் குழுவை உடனே அனுப்ப வேண்டும் என தான் வலியுறுத்தியதாகவும் திருச்சி சிவா கூறினார்.

## ராதாகிருஷ்ணன்

# ஹாக்கி ஸ்டேடியத்தில் மேம்பாட்டுப் பணிகள்!

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு!

*சென்னை, ஜூன் 26-*

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.06.2023) ராதாகிருஷ்ணன் ஹாக்கி ஸ்டேடியத்தில் நடைபெற்று வரும் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ராதாகிருஷ்ணன் ஹாக்கி ஸ்டேடியத்தில் வருகிற ஆகஸ்ட் 03 முதல் ஆகஸ்ட் 13 வரை ஹீரோ ஆசியன் சாம்பியன்ஸ் கோப்பை 2023 போட்டிகள் நடைபெற உள்ளது. இந்த போட்டியில் இந்தியா, சீனா, பாகிஸ்தான், மலேசியா, ஜப்பான், மற்றும் கொரியா ஆகிய 6 நாடுகள் பங்கேற்கின்றன. சர்வதேச அளவிலான இப்போட்டியினை சிறப்பாக நடத்துகின்ற வகையில் ராதாகிருஷ்ணன் ஸ்டேடியத்தில் புரனமைப்பு மற்றும் மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த புனரமைப்பு மற்றும் கட்டுமானப் பணிகளை சிறந்த முறையில் மேற்கொள்ள திட்டமிடுவதற்கென ஹாக்கி இந்தியா அதிகாரிகள் குழு கடந்த ஏப்ரல் 19ம் தேதி ஆய்வு மேற்கொண்டது. அதனைத் தொடந்து மேற்கொள்ளபட வேண்டிய பணிகள் திட்டமிடப்பட்டு மைதானத்தை புனரமைத்து மேம்படுத்தும் பணிகள் கடந்த ஏப்ரல் 28ம் தேதி முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது.

முதன்மை ஹாக்கி செயற்கை ஆடுதளம், வீரர்கள் பயற்சி செய்வதற்கான செயற்கை ஆடுதளம் மற்றும் இணைப்பு பணிகள், பார்வையாளர்களுக்கான இருக்கை வசதிகள், சிறப்பு விருந்தனர்கள் அமருவதற்கான பார்வையாளர் கூடம், விளையாட்டு வீரர்களுக்கான அறைகள், மின்னொளி வசதிகள், நவீன கழிப்பிட வசதிகள் மற்றும் பிற சீரமைப்பு பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.06.2023) மேயர் ராதா கிருஷ்ணன் ஸ்டேடியத்தில் நடைபெற்று வருகின்ற பணிகளை அதிகாரிகளுடன் நேரில்சென்றுபார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, ஆகியோர் உடனிருந்தனர்.

## மறமடக்கியில் இலவச பன்னோக்கு சிறப்பு மருத்துவ முகாம்!

### அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் துவக்கி வைத்தார்!

*புதுக்கோட்டை, ஜூன் 26-*

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், மறமடக்கி அரசு மேல்நிலைப்பள்ளியில், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, இலவச பன்னோக்கு சிறப்பு மருத்துவ முகாமினை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் 24.06.2023 அன்று துவக்கி வைத்து, கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை வழங்கினார்.

இந்நிகழ்வு மாவட்ட வருவாய் அலுவலர் மா. செல்வி தலைமையில் நடைபெற்றது.

பின்னர் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்ததாவது:-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழகம் முழுவதும் 100 இடங்களில் பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்திட உத்தரவிட்டுள்ளார்கள். அதனடிப்படையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் மறமடக்கி மற்றும் வயலோகம் ஆகிய இடங்களில் மருத்துவ முகாம்கள் நடைபெற்று வருகின்றன.

இன்றைய சூழ்நிலையில் மனிதர்களுக்கு எத்தனை வயதிலும் இரத்த அழுத்தம், சர்க்கரை நோய், சிறுநீரக நோய், மார்பக புற்றுநோய், கர்ப்பப்பை வாய் புற்றுநோய் உள்ளிட்ட பல்வேறு வியாதிகள் வந்து கொண்டிருக்கும் சூழ்நிலையில் இத்தகைய மருத்துவ முகாம்கள் நடத்தப்படுவதன் மூலம் மக்களுக்கு ஏற்படும் நோய் குறித்த அச்சங்கள் நீக்கப்படுகின்றன. முகாம்களில் பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, மகளிர் மருத்துவம், கண், காது மூக்கு தொண்டை, பல் மருத்துவம், எலும்பியல் மருத்துவம் மற்றும் மனநலம் மருத்துவம் உள்ளிட்ட சிறப்பு சிகிச்சைகளுக்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அவர்களுக்கு சிகிச்சை தேவைப்படும் நபர்களுக்கு உயர் சிகிச்சைகள் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை கொண்டாடும் விழாவானது மக்களுக்கு பயன்படும் வகையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில், மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகின்றன. நூற்றாண்டு கால தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 80 ஆண்டு காலம் சமுதாய வளர்ச்சிக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம் ஏழையின் வாழ்க்கை மேம்பாட்டிற்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வாழ்க்கை பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மருத்துவத்துறையில் மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் திட்டம் போன்ற சிறப்பு வாய்ந்த திட்டங்களை மக்களுக்காக செயல்படுத்தி வருகிறார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மருத்துவத் துறையில் செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்கள் அனைத்தையும் முழுமையாக பயன்படுத்திக் கொண்டு நல்வாழ்வு வாழ்வதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார்

இந்நிகழ்வில், வருவாய் கோட்டாட்சியர் சு.சொர்ணராஜ், துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மருத்துவர் நமச்சிவாயம், அறந்தாங்கி ஒன்றியக்குழுத் தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன், வட்டார மருத்துவ அலுவலர் மரு.முகமது இந்தியாஸ், வட்டாட்சியர் (ச.பா.தி.) பரணி, ஊராட்சி மன்றத் தலைவர் ராஜமனோகரி ரவி, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சொ. துரைசண்முகம்
### ஜூன் 26 (2014)



இளமைக் காலத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழக உறுப்பினரானார்.

அப்போதைய செங்கல்பட்டு மாவட்ட பிரதிநிதியாகவும், திருவான்மியூர் வட்டக் கழகப் பொறுப்பாளராகவும், கழக நிர்வாகத்தில் திருவான்மியூர் சென்னை மாநகர் மாவட்டத்திற்கு வந்தபோது பொதுக்குழு உறுப்பினராகவும், வேளச்சேரி பகுதிக் கழகச் செயலாளராகவும் கழகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. மற்றும் இளைஞரணி சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் பகுதிகளில் தொடர் பொதுக்கூட்டம் மற்றும் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்கள்!

### வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர், கடலூர் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!



கடலூர் கிழக்கு மாவட்ட திமுக மற்றும் இளைஞரணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் பகுதிகளில் தொடர் பொதுக்கூட்டம் மற்றும் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்கள் வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர், கடலூர் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களின் அறிவிப்பு வருமாறு

கடலூர் கிழக்கு மாவட்ட திமுக மற்றும் இளைஞரணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் பகுதிகளில் தொடர் பொதுக்கூட்டங்கள் மற்றும் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்கள் கீழ்கண்ட பட்டியலில் உள்ளவாறு நடைபெற உள்ளது.

அதுசமயம் சம்பந்தப்பட்ட மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் சிறப்பாக ஏற்பாடு செய்து நடத்திட வேண்டும். மேலும், அந்தந்த பகுதியில் நடைபெறும் பொதுக்கூட்டங்கள் மற்றும் தெருமுனைப் பிரச்சார கூட்டங்களில் கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மாநகர மேயர், ஒன்றியக் குழுத் தலைவர்கள் மாவட்ட, ஒன்றியக்குழு உறுப்பினர்கள், நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மன்ற தலைவர்கள், துணைத்தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், கழக இளைஞரணி நிர்வாகிகள் மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழகத் தோழர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. மற்றும் இளைஞரணி சார்பில்**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு,**

**பொதுக்கூட்டம் மற்றும் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்கள் நடைபெறும் விவரம்**

| நாள் | இடம் | சிறப்பு பேச்சாளர் |
|---|---|---|
| 1) 28.06.23 புதன்கிழமை | குறிஞ்சிப்பாடி தெற்கு ஒன்றியம் குறிஞ்சிப்பாடி பேரூர் | திண்டுக்கல் **ஐ.லியோனி** கொள்கை பரப்புச் செயலாளர் தலைவர், தமிழ்நாடு பாடல் நூல் கழகம். |
| 2) 01.07.23 சனிக்கிழமை | கீரப்பாளையம் கிழக்கு ஒன்றியம் | **நெல்லிக்குப்பம் புகழேந்தி**, கொள்கை பரப்பு இணைச் செயலாளர் |
| 3) 02.07.23 ஞாயிற்றுக்கிழமை | சிதம்பரம் நகரம் | **நெல்லிக்குப்பம் புகழேந்தி** Ex.Mla, கொள்கை பரப்பு இணைச் செயலாளர் |
| 4,) 03.07.23 திங்கள்கிழமை | கடலூர் வடக்கு ஒன்றியம் | **நெல்லிக்குப்பம் புகழேந்தி**. Ex.Mla, கொள்கை பரப்பு இணைச் செயலாளர் |
| 5) 03.07.23 திங்கள்கிழமை | புவனகிரி கிழக்கு ஒன்றியம் | **ச.அ.பெருநெற்கிள்ளி** கொள்கை பரப்பு துணைச் செயலாளர் |
| 6)04.07.23 செவ்வாய்கிழமை | குறிஞ்சிப்பாடி வடக்கு ஒன்றியம் | **ச.அ.பெருநெற்கிள்ளி** கொள்கை பரப்பு துணைச் செயலாளர் |
| 7) 05.07.23 புதன்கிழமை | கடலூர் மாநகரம் | **சைதை சாதிக்** தலைமைக் கழக பேச்சாளர் |
| 8)06.07.23 வியாழக்கிழமை | பரங்கிப்பேட்டை வடக்கு ஒன்றியம் | **சைதை சாதிக்** தலைமைக் கழக பேச்சாளர் |
| 9)07.07.23 வெள்ளிக்கிழமை | கம்மாபுரம் தெற்கு ஒன்றியம் | **குடியாத்தம் குமரன்** கொள்கை பரப்பு துணைச் செயலாளர் |
| 10)08.07.23 சனிக்கிழமை | புவனகிரி மேற்கு ஒன்றியம் | **குடியாத்தம் குமரன்**, கொள்கை பரப்பு துணைச் செயலாளர். |
| 11)10.07.23 திங்கள்கிழமை | குமராட்சி கிழக்கு ஒன்றியம் குமராட்சி மத்திய ஒன்றியம் | **புதுக்கோட்டை விஜயா**. மகளிரணி பிரச்சார செயலாளர் |
| 12)10.07.23 திங்கள்கிழமை | வடலூர் நகரம் | முனைவர் **கோவி.செழியன்,** வர்த்தகர் அணி துணைத் தலைவர் அரசு கொறடா |
| 13)10.07.23 திங்கள்கிழமை | கடலூர் தெற்கு ஒன்றியம் | **தூத்துக்குடி சரத்பாலா** தலைமைக் கழக பேச்சாளர் |
| 14) 11.07.23 செவ்வாய்கிழமை | காட்டுமன்னார்கோவில் மேற்கு ஒன்றியம், காட்டுமன்னார்கோவில் கிழக்கு ஒன்றியம், காட்டு மன்னார்கோவில் பேரூர் | **புதுக்கோட்டை விஜயா.** மகளிரணி பிரச்சார செயலாளர் |
| 15) 11.07.23 செவ்வாய்கிழமை | திருமுட்டம் வடக்கு ஒன்றியம் | **தூத்துக்குடி சரத்பாலா** தலைமைக் கழக பேச்சாளர் |
| 16) 13.07.23 வியாழக்கிழமை | குமராட்சி வடக்கு ஒன்றியம் குமராட்சி தெற்கு ஒன்றியம் குமராட்சி மேற்கு ஒன்றியம் | முனைவர் **கோவி.செழியன்**, வர்த்தகர் அணி துணைத் தலைவர்,அரசு கொறடா |
| 17) 13.07.23 வியாழக்கிழமை | பரங்கிப்பேட்டை தெற்கு ஒன்றியம் | **கந்திலி கரிகாலன்** தலைமைக் கழக பேச்சாளர் |
| 18)13.07.23 வியாழக்கிழமை | திருமுட்டம் கிழக்கு ஒன்றியம் | **ஈரோடு. இறைவன்,** கழக இலக்கிய அணி துணைச் செயலாளர் |
| 19) 14.07.23 வெள்ளிக்கிழமை | திருமுட்டம் மேற்கு ஒன்றியம் | **ஈரோடு.இறைவன்**, கழக இலக்கிய அணி துணைச் செயலாளர் |
| 20) 14.07.23 வெள்ளிக்கிழமை | கீரப்பாளையம் மேற்கு ஒன்றியம் | **கந்திலி கரிகாலன்** தலைமைக் கழக பேச்சாளர் |
| 21) 15.07.23 சனிக்கிழமை | கடலூர் கிழக்கு ஒன்றியம் கடலூர் மேற்கு ஒன்றியம் | **புதுக்கோட்டை விஜயா.** மகளிரணி பிரச்சார செயலாளர் |
| 22) 16.07.23 ஞாயிற்றுக்கிழமை | கடலூர் மாநகரம் | **களூர். முரளி** தலைமைக் கழக பேச்சாளர் |
| 23) 17.07.23 திங்கள்கிழமை | கம்மாபுரம் வடக்கு ஒன்றியம் கெங்கைகொண்டான் பேரூர் | **களூர். முரளி** தலைமைக் கழக பேச்சாளர் |

அமைச்சர் **எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்,**
(வேளாண்மை - உழவர் நலத்துறை),
கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்,
செயலாளர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.




முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு கடலூர் மாவட்டம் பண்ருட்டி வட்டம் மருங்கூர், கொள்ளுக்காரன்குட்டை பகுதியில் உள்ள வள்ளலார் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாமில் நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராஜேந்திரன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண் தம்புராஜ் ஆகியோர் பயனாளிகளுக்கு கண்கண்ணாடிகளை வழங்கினர்.